PR. 574 DT: 02-10-12


# TAMILNADU STATE BLOOD TRANSFUSION COUNCIL

Registration No. 79 of 1997
(A Society Registered under the Tamilnadu Societies Registration Act, 1975)
417, Pantheon Road, Egmore, Chennai - 600 008.


செய்தி வெளியீடு

## தேசிய தன்னார்வ இரத்ததான நாள் 01.10.2012

தேசிய தன்னார்வ இரத்ததான நாள் ஆண்டு தோறும் அக்டோபர் 1–ஆம் தேதி பாதுகாப்பான இரத்தம் மற்றும் தன்னார்வ இரத்த தானம் பற்றிய விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்தவும். தன்னலமற்ற சேவையின் மூலம் பல உயிர்களைக் காப்பாற்றுகின்ற இரத்தக் கொடையாளர்களுக்கும் இரத்த தான முகாம் அமைப்பாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் நாளாக இத்தினம் இந்தியா முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருப்பொருளை மையமாகக் கொண்டு இத்தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தன்னார்வ இரத்த தானத்தை பொது மக்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் மத்தியில் தன்னார்வ இரத்த தானத்தின் மதிப்பை எடுத்துக் கூறும் வகையில் உருவான இந்த ஆண்டு கருப்பொருள் "எங்கோயோ ஒருவருக்கு உங்களுடைய இரத்தம் தேவைப்படுகிறது. இரத்த தானம் விலைமதிப்பற்றது."

தன்னார்வ இரத்த தான தின நோக்கங்கள்:

- தன்னார்வ இரத்த தானம் குறித்த விழிப்புணர்வை பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் அதிகரிக்க செய்தல்
- இரத்த தானம் செய்பவர்களை தொடர்ந்து இரத்த தானம் செய்ய ஊக்கமளித்தல் மற்றும் அவர்களின் தன்னலமற்ற சேவைக்கு நன்றி தெரிவித்தல்
- இதுவரை இரத்த தானம் செய்ய தகுதியுடையவர்களாக இருந்தும் இரத்த தானம் செய்யாதவர்களை இரத்த தானம் செய்ய ஊக்குவித்தல்
- இரத்த தானம் முகாம் அமைப்பாளர்களை தொடர்ந்து இரத்த தானம் முகாம் நடத்த ஊக்கமளித்தல் மற்றும் அவர்களின் தன்னலமற்ற சேவைக்கு நன்றி தெரிவித்தல்
- இதுவரை இரத்த தான முகாம் நடத்த வாய்ப்பிருந்தும் நடத்தாதவர்களை இரத்த தானம் முகாம் நடத்த ஊக்குவித்தல்


✆ Direct : 044-2819 1909, 2819 4917, Off : 044 - 2819 0891, 2819 0467
Fax No. 91-044-28191909, E-mail : ddbstansacs@yahoo.co.in, website : http : // www.tnsacs.tn.nic.in.com

தன்னார்வ இரத்த தானத்தில் தமிழகம் முன்னனி மாநிலத்தில் ஒன்றாகத் திகழ்கிறது. பாதுகாப்பான மற்றும் தரமான இரத்தம், தேவைப்படும் அனைவருக்கும் எளிதில் கிடைக்கும் வகையில் 274 இரத்த வங்கிகள் ( 85 அரசு இரத்த வங்கிகள் 9 மத்திய மாநில நிர்வாக இரத்த வங்கிகள் 1 80 தனியார் இரத்த வங்கிகள் ) தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. 2011–12 ஆம் ஆண்டு தமிழகம் 7.11 இலட்சம் இரத்த அலகுகள் சேகரித்தது. உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி, மக்கள் தொகையில் 1 சதவீதம் பேர் இரத்த தானம் செய்து இரத்த தேவையில் தமிழகம் தன்னிறைவு பெற்று விளங்குகிறது. இதில் 94 சதவீதம் அலகுகள் (அரசு மற்றும் தனியார்) தன்னார்வ இரத்தக் கொடையாளர்கள் மூலம் பெறப்பட்டது.

தேசிய தன்னார்வ இரத்ததான தினத்தை முன்னிட்டு தமிழ் நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், மற்றும் தமிழ்நாடு மாநில குருதி பரிமாற்றுக் குழுமம் இணைந்து அக்டோபர் 2 ஆம் தேதி கீழ்க்கண்ட நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்துள்ளது.

அக்டோபர் 2 ஆம் நாள் : (02.10.2012)

- மாலை: 5.00 மணியளவில் சென்னை மெரினா கடற்கரையில் (உழைப்பாளர் சிலை அருகில்) "தன்னார்வ இரத்த தான விழிப்புணர்வு – மனித சங்கிலி "

இந் நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மரு. வி. எஸ். விஜய் **M.S. (Ortho)**அவர்கள், வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள், செயலர் மக்கள் நலவாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அவர்கள், திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், அரசு அதிகாரிகள், அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர்கள், அரசு இரத்த வங்கி மருத்துவர்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள், மற்றும் பணியாளர்கள் அனைவரும் பங்கேற்க உள்ளனர்.

மேற்கண்ட செய்தி வெளியீட்டினை, அச்சு மற்றும் மின்னனு ஊடகங்களுக்கு வெளியிட ஆணை வேண்டப்படுகிறது.

ஒம்/–XXXXXXXXXXXX
திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர்

//உண்மை நகல் உத்திரவின் படி பணிந்தனுப்படுகிறது //

வெளியீடு :- இயக்குனர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை
சென்னை-9.

இணை இயக்குநர் ( கு.பா. (ம) த.க.)